**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதற்காக அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதி இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### (3) அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

### (4) கவன ஈர்ப்பு.

### (அ) உருது பயிற்சிப் பள்ளிகள் மூடப்பட்டதும் அதன் விளைவுகளும்.

THIRU M. A. LATHEEF : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the closure of all the Urdu Training Schools in the State resulting in the dislocation of Urdu teachers and trainees/students.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இம் மாநிலத்தில், கீழ்க்கண்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உருது மொழியில் ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

(1) அரசினர் உருது ஆசிரியர்ப் பயிற்சி நிறுவனம் (ஆண்கள்) அண்ணா சாலை, சென்னை.

(2) அரசினர் ஹோபர்ட் இடைநிலை மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (பெண்கள்) இராயப்பேட்டை.

(3) வைகௌண்ட்ஸ் கோஷன் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (பெண்கள்) திருச்சி.

1974 மார்ச் 28] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வைகௌண்ட்ஸ் கோஷன் நிறுவனத்தில் இளநிலை ஆசிரியர்களுக்கான பயிற்சி மட்டும் அளிக்கப்பட்டு வந்தது. இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி இம் மாநிலத்தில் நிறுத்தப்பட்டவுடன் இந்நிறுவனத்திலும் இப்பயிற்சி வகுப்பு மூடப்பட்டுவிட்டது. மற்ற இரு நிறுவனங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் உருது மொழி பயிற்சி வகுப்பு (இடைநிலை) ஒன்று நடத்துவதற்கு அனுமதி வழங்கி வந்தது.

ஆயினும், உருது மொழி பயிற்சி வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வந்தது. 1969-70-ம் ஆண்டில் உருது மொழி பயிற்சி வகுப்பு நடத்த இயலாதபடி குறைவான விண்ணப்பங்களே வந்தன. ஆகவே, 1970-71-ம் ஆண்டில் முதலாமாண்டு பயிற்சி வகுப்பு இப்பள்ளிகளுக்கு அளிக்கப்படவே இல்லை. சிறுபான்மை மொழிகள் மூலம் பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் போதுமான அளவு விண்ணப்பம் செய்வதில்லை. மேலும் தகுதி வாய்ந்த உருதுமொழி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் புதிதாகப் பணியிலமர்த்தும் அளவிற்குப் போதுமான அளவில் உள்ளனர். ஆகவே மேற்கூறிய பயிற்சி நிறுவனங்களில் உருது மொழி பயிற்சி வகுப்பு 1971 எப்ரல் முதல் திறக்க இயலாத நிலைமை ஏற்பட்டது.

உருது மொழி பயிற்சி ஆசிரியர்களுக்கான தேவை ஏற்பட்டால் அவ்வப் போது தற்போதுள்ள நிறுவனங்களிலேயே ஒன்று அல்லது இரண்டு உருது மொழிப் பயிற்சி வகுப்புகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** சார், போதிய அளவிற்கு மாணவர்கள் உருது பயிற்சி பெறக்கூடிய அளவில் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினர்கள். ஆனல் சென்னையிலே உள்ள பயிற்சிப் பள்ளிகளைப் பார்த்தால் உருது பேசுகின்றவர்கள் மிகவும் கணிசமாக இருக்கிறார்கள். திருவல்லிக்கேணி, சூளை, ஆயிரம் விளக்கு போன்ற பகுதிகளில் லட்சக்கணக்கான உருது பேசும் மாணவர்கள் இருக்கிறார்கள், அதேபோல் வடார்க்காடு, திருச்சி, மதுரை மாவட்டங்களில் உருது பேசும் மாணவர்கள் இருக்கிறார்கள்.

திடீரென்று இம்மாதிரி மூடிவிட்டதால் எங்களுக்கு முறையீடுகள் வந்திருக் கின்றன. பயிற்சிப் பள்ளியை மூடிவிடுவதால் உருது ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும், பிறகு இல்லாமல் போய்விடுவார்கள். அதனல் உருது படிக்கும் மாணவர்களுக்கு வாய்ப்பு இருக்காது என்பதால், இதிலே கணிசமாக வருவதில்லை என்பதில் அரசு எந்தக் கணக்கில் வைத்திருக்கிறது, அந்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, சிறுபான்மை மொழியினருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் பயிற்சிப் பள்ளி உடனடியாகத் திறக்கப்படுமா, ஒன்றே ஒன்றையாவது திறப்பதற்கு அரசு முன்வரவேண்டும், அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே உருது மொழி பயிற்சி வகுப்பிலே சேர விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது என்று சொன்னேனே தவிர, பள்ளிகளிலே உருது படிக்கின்ற மாணவர்கள் குறைவாக வருகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. மேலும் உருது மொழி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு ஏற்படாமல் இருக்கிறார்கள் என்ற கருத்து இருக்கிறது. இப்பொழுதேகூட தேவைப்படும் அளவிற்கு ஆசிரியர்கள் இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டால் இரண்டு பள்ளி களிலேயும் வைப்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டால் மறுபடியும் திறக்க இருக்கிறதே தவிர, அறவே இல்லை யென்று மூடவில்லை.

இப்பொழுதே வெளியிலே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு பெறாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலை கிடைத்து, இந்த ஆண்டு கணக்கிடும்பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் கணக்கிடும் பொழுது உருது மொழி பயிற்சி பெற்றவர்கள் யாரும் இல்லை, அவர்கள் தேவைப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுவது போன்ற நிலை இருந்தால் வருகிற ஆண்டில் இரண்டு பள்ளிகளிலும் உருது மொழிப் பயிற்சிக்கு இடம் ஒதுக்குவதில் ஆட்சேபனையில்லை. அரசு ஆராய்ந்து தக்க முடிவெடுக்கும்.

**(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் அரசுடைமையாக்கப்பட்ட சில கிராமங் களில் பட்டா விசாரணை நடத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. சங்குமுத்து தேவர் அவர்கள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்கா சிவந்திபுரம், சிவந்தி ஈசானமடம் ஆகிய கிராமங்கள் அரசுடைமையானதை சுப்ரீம் கோர்ட்டு பல ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்ட பிறகும் இதுவரை பட்டா விசாரணை நடத்த அரசு நடவடிக்கை எடுக்காதது குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.